Arima Nokku

# அரிமா நோக்கு

8 : 1 ஏப்பிரல் 2014

ரூ.30

ISSN 2320-4842

ஆசிரியர்: ஈரோடு தமிழன்பன்



மொழி, இலக்கியம், கலை, பண்பாடு, வரலாறு, மெய்யியல், அறிவியல்சார் பன்னாட்டுக் காலாண்டிதழ்

International Quarterly on Language, Literature, Art, Culture, History, Philosophy and Science

ISSN 2320-4842

அரிமா நோக்கு
8 : 1 ஏப்பிரல் 2014

கமலா தாஸ்
- வ. ஜெயதேவன் 03
சங்கப் பெண்பாற்புலவர்களின் படைப்பாளுமை
- இரா. மோகன் 05
Fallow Deer Fawns upon the Doe: Addressing Ainkurunooru
- S.A. Sankaranarayanan 09
துணைவினைகளின் பண்புகளும் பயன்களும்
- சு. கவிதா 12
Identification of Infants at Risk for Developmental Disabilities in Indian Condition
- Leela Agnes, D. Meikandan & S. Prabakar Immanuel 15
சங்க அகப்பாடல் புனைவில் புறச் செய்திகளின் செல்வாக்கு
- இரா. வித்யா 21
படை இயங்கு அரவமும் இயங்கு படை அரவமும்
- வாணி அறிவாளன் 24
குறுந்தொகையில் நோக்கு
- இரா. மோகன் 41
சூழலியல்நோக்கில் ஐங்குறுநூறு
- இரா. விஜயராணி 46
Microstructures & Macrostructures as a Study and Aid in Textual Analysis and Textual Creation
- Vikram Malhotra & S. Raja 28
தமிழ்-சமஸ்கிருத இலக்கண மரபுகள் - பா. சங்கரேஸ்வரி 33
The Future of Lexicography
- T. K. Ragunathan & R. Pannirukaivadivelan 39
சங்க இலக்கியமும் நடுகற்களும்
- தி. சுமதி 42
காப்பியமும் கனவும்
- ஹ. மார்கிரேட் மேரி சுமதி 45
Gharial god and Tiger goddess in the Indus Valley
- Naga. Ganesan 49

# தலைவாயில்

ஈரோடு தமிழன்பன்

## விடியலின் கீற்று வெளிப்படுமா?

ஐ. நா. மனித உரிமைகள் ஆணையர் நவநீதம் அறிக்கைக்குப் பின், இலங்கையில் நிகழ்ந்த மனித உரிமைகள் மீறல் குறித்துப் பன்னாட்டுப் புலனாய்வுக் குழுவின் ஆய்வுக்கு ஆணையிடக் கோரும், அமெரிக்கத் தீர்மானத்தை மங்கிய நம்பிக்கையோடு உலகம் எதிர்பார்த்தது. இலங்கையின் இனவாத அரசைக் குற்றவாளிக் கூண்டில் நிறுத்தும் அறநிலை கிட்டாதா என்ற ஏக்கம்தான்; உலகப் பார்வைச் துயருற்ற தமிழ் இனத்தின் பக்கம் ஒருமுகமாய்த் திரும்பாதா என்கிற துடிப்புத்தான், இவ்வெதிர்பார்ப்பிற்குக் காரணம் அமெரிக்காவின் அரசியல் ஆதாயம், தொக்கி நிற்பதை அறிந்த போதிலும் அத்தீர்மானத்திற்கு உலக அளாவிய ஒரு கவனம் தரப்பட்டது மெய்யே.

47 நாடுகள் பங்கு கொண்ட அவைக் கூட்டத்தில் சீனா, இரசியா, கியூபா, வியட்நாம் உள்ளிட்ட 12 நாடுகள் அமெரிக்கத் தீர்மானத்திற்கு எதிராக வாக்களித்தன. புரட்சி, போராட்டம் விடுதலை என்று உலகச் சிந்தனைகளைச் சிவக்க வைத்த நாடுகளின் வீரம் செறிந்த வரலாறு, பொய்யாய், பழங் கதையாய்ப் போனது. பிரான்சு ஜெர்மனி, இத்தாலி, அயர்லாந்து என 23 நாடுகள் அமெரிக்கத் தீர்மானத்தை ஆதரித்து வாக்களித்தன. தென்னாப் பிரிக்கா, இந்தோனேசியா உள்ளிட்ட 12 நாடுகள் நடுவு நிலைமை வகித்தன.

இந்தியா? தன் தொப்புள் கொடி உறவான—ஈழத் தமிழினத்திற்கு இழைக்கப் பட்ட, கொடுமைகள், குற்றங்கள், கொலை பாதகங்கள் — எல்லாம் எங்கோ, எவர்க்கோ, எப்போதா நேர்ந்தவை என மனம் மரத்துப் போன நிலையில் நியாயப் புரப்பை நெஞ்சின் அடி ஆழத்தில் புதைத்துவிட்டு 'நடுவுநிலைமை' வகித்தது. உண்மையின் பக்கம் சார்ந்து நிற்பதை நடுவு நிலைமைக்கு எதிரானது என்று அண்ணல் காந்தி எப்போது இந்திய அரசுக்கு வகுப்பு எடுத்தார்? தெரியவில்லையே!

அமெரிக்கா, ஜெனிவாவில் கொண்டுவந்த தீர்மானத்தில் நவநீதம் அவர்கள் பரிந்துரைத்த பன்னாட்டுப் புலனாய்வுக்கு இடம் இல்லை. ஐ. நா. மனித உரிமை ஆணையமே விசாரிக்கலாம் என்கிறது தீர்மானம். அதுவும், இலங்கை அரசின் அனுமதி பெற்று, அது வழிகாட்டுகிறபடி புலனாய்வு செய்யலாமாம்.

அமெரிக்கத் தீர்மானத்தில் 'இனப்படு கொலை பற்றிய புலனாய்வு' என்று குறிப்பிடப்படவில்லை. 'போர்க்குற்றம்' என்று பொதுமைப்படுத்தி, நீர்த்துப்போன நிலையில், அது குற்றம் இழைத்தவனையும், குற்றத்தால் பாதிக்கப்பட்டவனை யும் சமன்படுத்திப் பேசியது. அவைக்கு வரும் முன்பே இப்படி அழுத்தம் குறைந்துபோன தீர்மானம். அவைக்குள் வந்தபோது 'போர்க்குற்றம்' என்பதனையும் பொக்கெனப் போகத் தொலைத்து விட்டது. தீர்மானத்தின் செயற்பாட்டுப் பகுதியில் (operative portion) எவ்விடத்திலும் 'போர்க்குற்றம்' என்கிற தொடர் பயன்படுத்தப்படவில்லை.

இலங்கையில் நடைபெற்ற 'காமன்வெல்த்' மாநாட்டுக்குச் சென்று தமிழ் மக்களின் கண்ணீர்க் கதைகளில் கரைந்து உருகிக் கருணையாளராகத் தோற்றம் கொடுத்த இங்கிலாந்தின் தலைமை அமைச்சர் தாவீதுகாமரூன் சொத்தையும் சொள்ளையுமான அமெரிக்கத் தீர்மானத்தை நெஞ்சில் ஒளியு மின்றி நேர்மைத் திறமும் இன்றிப் புகழ்ந்து பேசினார். ☞

ISSN 2320-4842

தன்னுரிமை படைத்த பன்னாட்டுப் புலனாய்வுக் குழு அமைக்கப்பட்டால் அன்றி ஈழத்தில் நடந்தது இனப்படுகொலை என்றோ, இலங்கை அரசின் போர்க்குற்றம் என்றோ முடிவு கட்டிச் சொன்னால் அன்றி-குற்றங்களுக்கு உரிய தண்டனை வழங்கப்பட்டால் அன்றி, தமிழ் ஈழம் வேண்டுமா வேண்டமா என்பது குறித்துத் தமிழ் ஈழ மக்களிடத்தில், அச்சமற்ற சூழ்நிலையில் கருத்து வாக்கெடுப்புக்கு வாய்ப்பளித்தால் அன்றி, விடியலின் கீற்று, கீழ்வாசலில் வெளிப்படாது என்று, உலகம் முழுமையும் உள்ள தமிழ்மக்கள் உணர்ந்து, ஒன்றிணைந்து ஒங்கிய குரலில் முழங்க வேண்டும்.

*ஆசிரியர்*

ஈரோடு தமிழன்பன்

*இணையாசிரியர்*

*(மதிப்புறு நிலை)*

வ. ஜெயதேவன்

*ஆசிரியர் குழு*

சிலம்பொலி சு. செல்லப்பன்

கா. செல்லப்பன்

இரா. இளவரசு

நா. கணேசன் (அமெரிக்கா)

நா. சுப்பிரமணியன் (கனடா)

பொன். செல்வகணபதி

நா. முத்துக்குமார்

சீதாலட்சுமி (சிங்கப்பூர்)

மு. பரமசிவம் (மலேசியா)

பத்மாவதி விவேகானந்தன்

இரா. பிரேமா

பா. இரவிக்குமார்

மருதூர் அரங்கராசன்

பெ. இலக்குமிநாராயணன்

எஸ். ஏ. சங்கரநாராயணன்

*அறிவுரைக் குழு*

இந்தியாவிலும் அயல் நாடுகளிலும் உள்ள தமிழியல் அறிஞர்கள், பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் மற்றும் படைப்பாளிகள்

*பதிப்பாளர்*

இரா. பன்னிருகைவடிவேலன்

# கட்டண விவரம்

| | | | |
|---|---|---|---|
| வாழ்நாள் கட்டணம் | ரூ. | 3000/- | US $ 150 |
| புரவலர் கட்டணம் | ரூ. | 5000/- | US $ 200 |
| நிறுவனம் சார் உறுப்பினர் (Institutional Membership) | ரூ. | 10,000/- | US $ 500 |

- நிறுவனம்சார் உறுப்பினர்களுக்கு அவர்களுடைய வாழ்நாள் முழுதும் அரிமா நோக்கு இதழ் அனுப்பப்படும்; நோக்கு வெளியிடும் ஒவ்வொரு நூலுக்கும் 50% சிறப்புக் கழிவும் உண்டு.
- புரவலர்களுக்கு அவர்களுடைய வாழ்நாள் முழுதும் அரிமா நோக்கு இதழ் அனுப்பப்படும்; நோக்கு வெளியிடும் ஒவ்வொரு நூலுக்கும் 40% சிறப்புக் கழிவும் அளிக்கப்படும்.
- வாழ்நாள் உறுப்பினர்களுக்கு அவர்களுடைய வாழ்நாள் முழுதும் அரிமா நோக்கு இதழ் அனுப்பப்படும்; நோக்கு வெளியிடும் ஒவ்வொரு நூலுக்கும் 30% சிறப்புக் கழிவும் அளிக்கப்படும்.

**விளம்பரக் கட்டணம்**

| | | |
|---|---|---|
| பின்னட்டை (பல வண்ணங்கள்) | ரூ. | 15,000 |
| உள்ளட்டை (பல வண்ணங்கள்) | ரூ. | 10,000 |
| முழுப்பக்கம் (கருமை & வெண்மை) | ரூ. | 3,000 |
| அரைப்பக்கம் (கருமை & வெண்மை) | ரூ. | 1,500 |

*தொடர்ந்து ஓராண்டு (நான்கு இதழ்களுக்கு) அளிக்கப்படும் விளம்பரங்களுக்கும் 10% சிறப்புக் கழிவு உண்டு. முன்பணம் செலுத்தி முகமை பெற விழையும் முகவர்களும் இவ்விதழில் விளம்பரம் செய்ய விழையும் வாணிகம் மற்றும் விளம்பர முகமை நிறுவனத்தாரும் தொடர்பு கொள்ளலாம்.*

**கட்டணம் செலுத்த:**

DD in favour of *'Nokku'* payable at Chennai

Indian Overseas Bank (IFSC Code: IOBA0001681)

S.B. A/c No. 16810100006423

**அரிமா நோக்கு**

4/1083 நேரு நகர், 2ஆவது முதன்மைச் சாலை

கொட்டிவாக்கம், சென்னை 600 096

வலைத்தளம்: www. arimaanokku.com

மின் அஞ்சல்: arimaanokku@hotmail.com செல்: 9380626448